**கடுகன்னாவ நகர சபை**

**கண்டி மாவட்டம்**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கடுகன்னாவ நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மார்ச் மாதம் தேர்தல் முற்பணத்தை தீர்க்கையில் ரூபா 78,836 தொகையான தீர்க்கப்பட்ட முற்பணம் ரூபா 157,673 தொகையான முற்பணக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. இத் தவறு சீராக்கப்படுவதற்காக முற்பணக் கணக்கில் இருந்து ரூபா 78,836 தொகை அகற்றப்பட வேண்டிய போதிலும் அதே தொகையால் முற்பணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் இருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த பழைய நகர சபை அலுவலக வளாகத்தில் இருந்த கட்டிடத்திற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,719,201 தொகையான குத்தகைத் தொகை, ரூபா 913,955 தொகையாக கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 2,805,246 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,409,549 தொகையான பணம் ரூபா 1,273,667 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, கடன்கொடுத்தோர் ரூபா 135,882 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத நிலையத்தில் காணப்பட்ட மருந்துப் பொருள் இருப்பில் ரூபா 39,922 பெறுமதியானவை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) உக்காத கழிவுப் பொருட்களின் விற்பனையில் இருந்து கிடைக்கும் வருமானம் உரிய ஆண்டுகளின் போது வலுமானமாக கணக்கீடு செய்யப்படாது, முன்னைய 03 ஆண்டுகளின் வருமானம் கடன் விடுவிப்பு எனும் பெயரிலான கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அக் கணக்கு மீதியான ரூபா 643,115 தொகையான ஐந்தொகையின் ஒதுக்கத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் 7 விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 9,381,346 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,969,643 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதி ரூபா 5,048,234 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 2,407,872 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்களுக்கு உரித்தான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 960,986 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் | |
| 36(உ)(ii) ஆம் உப பிரிவு | (i) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன்னங்கீகாரம் இன்றி 36 காணித்துண்டுகள் குத்தகைக்கிடப்பட்டிருந்தன. |
| | (ii) சட்ட ரீதியான உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது சத்தியக் கடதாசி ஒன்றிற்காக 27 காணிகள் குத்தகைக்கிடப்பட்டிருந்ததுடன் சத்தியக் கடதாசியேனும் இன்றி 09 காணித் துண்டுகள் குத்தகைக்கிடப்பட்டிருந்தன. |

(iii) சத்தியக் கடதாசியின் 3 ஆம் பந்தியின் படி, குத்தகைப் பெறுனர் காணியை தற்காலிகமான பயிர்ச்செய்கைக்காக அன்றி வேறெந்த நடவடிக்கைக்காகவும் பயன்படுத்தலாகாது எனக் குறிப்பிடப்பட்ட போதிலும் வீட்டை நிர்மாணிப்பதற்கும் வணிக நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| நி.பி. 571(2) | ரூபா 220,105 தொகையான 92 காலாவதியான வைப்புத் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1995 திசெம்பர் 27 ஆம் திகதிய 95/9 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதம செயலாளரின் கணக்குச் சுற்றறிக்கை 06 ஆம் பந்தி | சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 325,781 தொகையான நிலுவைக் கடன் மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,274,116 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,979,594 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,294,522 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | ஆண்டிற்காக பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவையில் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2015.12.31 இல் உள்ளவாறு மொத்தமாக அறவிடப்பட வேண்டிய அளவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 6,209,715 | 7,568,853 | 3,442,114 | 5,091,789 | 5,244,665 |
| குத்தகை வாடகை | 500,395 | 2,938,136 | 112,567 | 2,834,195 | 491,769 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 18,500 | 1,210,220 | 5,000 | 1,196,720 | 27,000 |
| ஏனைய வருமானம் | 536,975 | 1,259,230 | 536,975 | 633,895 | 625,335 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 151,158 | 137,683 | 80,075 | -- | 208,766 |
| முத்திரைக் கட்டணம் | 1,253,550 | 745,750 | 853,660 | -- | 745,750 |
| **மொத்தம்** | | | | | 7,343,285 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,343,285 தொகையான நிலுவை வருமான மீதி அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 வீதி வரி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 சனவரி 01 ஆம் திகதிய நிலுவை வீதவரி வருமானம் ரூபா 6,209,715 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 7,568,853 தொகையாகக் காணப்பட்டது. முன்னைய நிலுவையில் ரூபா 3,442,114 தொகையும் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 5,091,789 தொகையும் அறவிடப்பட்டிருந்ததுடன் நூற்று வீதமாக இது 55 சவீதமாகவும் 67 சதவீதமாகவும் காணப்பட்டது. இதன் படி, வருமானச் சேகரிப்பு நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 10 அரசாங்க நிறுவகங்களில் 2015 ஆம் ஆண்டின் இறுதித்தினத்தில் அறவிடப்பட வேண்டிய வீத வரி மீதி ரூபா 648,158 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980.'.46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் படி, குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கடைகளின் மாதாந்த வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட்டு வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபையிடம் உள்ள சொகுசுச் சந்தையில் 14 கடைகளும் புதிய சந்தைத் தொகுதியில் 19 கடைகளும் 2002 ஆம் ஆண்டு முதல் நீண்ட காலமாக குத்தகைக்கிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது வாடகை திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், புதிய மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய வியாபாரச் சந்தைத் தொகுதியில் 07, 10 மற்றும் 16 எனும் 03 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டமை குறித்து சபைக்கும் கடை உரிமையாளர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட எந்தவிதமான சட்டரீதியான ஆவணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமான ரூபா 208,766 தொகையும் முத்திரைக் கட்டணமான ரூபா 745,750 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

### 2.2.5 விளம்பரப் பலகைக் கட்டணம்

2014 திசெம்பர் 05 ஆம் திகதிய 1892 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி நிரந்தரமான அறிவித்தல் பலகைக்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 100 கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 306 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 1,796,075 தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) கடுகன்னாவ வாராந்த சந்தையில் 2008 ஆம் ஆண்டு முதல் நிலவிய ரூபா 252,827 தொகையான நிலுவையான கடை வாடகை மீதியை அறவிடுவதற்காக கண்ட மாவட்ட நீதிமன்றத்தில் ஓர் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் குத்தகையாளரின் ஆதனத்தை ஏலவிற்பனை செய்து நிலுவைத் தொகையை அறவிடுமாறு 2014 மே 07 ஆம் திகதிய வழக்கின் இறுதித் தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபையிடம் இருந்த மதுபான சாலை குத்தகைக்கிடப்பட்டமைக்காக 2015 திசெம்பர் 31 ஆம் திகதி லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடட் இனால் ரூபா 624,435 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடட் நிறுவகத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த ஓர் உடன்படிக்கையின் படி, சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 65,000 தொகை மாதாந்தக் கட்டணம் பட்டியல் இடப்பட்டு ரூபா 624,435 தொகை வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2014 செப்தெம்பர் மாதம் முதல் அக் கட்டணம் ரூபா 48,750 தொகையாகக் குறைத்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆராய்ந்தறிவதற்கும் பட்டியலிடப்படுகையிலும் சரியான பெறுமதி இனங்காணப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 05 ஆம் திகதிய 1892 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி, முச்சக்கர வண்டி நிறுத்திவைத்தல் கட்டணமாக முச்சக்கர வண்டியில் இருந்து வருடாந்தம் ரூபா 1,200 தொகையான கட்டணம் அறவிடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், முச்சக்கர வண்டி நிறுத்திவைப்பதற்காக காணி வசதிகள் ஒதுக்கப்பட்டிராமை மற்றும் துணைச் சட்ட மூலங்கள் விதந்துரைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையால் முச்சக்கர வண்டிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், திட்டங்கள் அங்கீகரிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய 02 ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்றிருந்த 242 கட்டிட விண்ணப்பங்களில் 224 விண்ணப்பங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், இணக்கச் சான்றிதழ் இதில் 17 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபைக்குரித்தான சொகுசு சந்தைத் தொகுதியில் 12 ஆம் இலக்க கடையை குத்தகையாளர் மீள சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீள குத்தகையிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் ரூபா 90,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

### 3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மூலதனச் செலவினத்தை ஏற்பதற்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 2,750,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டு, பின்னர் ரூபா 4,880,200 தொகையான ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. எனினும், ஏற்கப்பட்டிருந்த உள்ளபடியான கிரயம் ரூபா 9,088,788 தொகையானமையால் அங்கீகாரமின்றி ரூபா 1,458,588 தொகையான மூலதனச் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையே ஏற்பாடுகள் மாற்றப்பட்டதை அடுத்தும் பாதீடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான 14 விடயங்களில் 24 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு மேலாகவும் 56 செலவின விடயங்களில் 16 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு மேலாகவும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 08 வருமான விடயங்களிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 5,213,000 தொகையான பணத்தில் எவ்வித வருமானமும் பெறப்பட்டிராததுடன் 17 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,225,000 தொகையான ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் ஏற்கப்படாது முழுமையான ஏற்பாடும் வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 598,000 பெறுமதியான 06 வாகனங்களும் இயந்திர உபகரணங்களும் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஆ) 2015 பெப்ரவரி மாதம் அன்பளிப்பாக சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த முறையே ரூபா 17,649,179 பெறுமதியும் ரூபா 7,967,144 பெறுமதியுமான பக்கோ இயந்திரமும் வைபிரேடிங் ரொலரும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித செயற்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு